Date : 19.02.2026

SC.No. : 194/2024

PW : 1

Name : **முனியசாமி த.பெ. ராஜேந்திரன் பெரியசாமி**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**(எதிரி சிறையிலிருந்து முன்னிலைப்படுத்தப்பட்டார்)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. எனக்கும் எதிரி ஆனந்தக்குமாருக்கும் எந்தப்பிரச்சினையும் மற்றும் எந்த முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். அ.சா.2 அஜய்க்கும் எதிரி ஆனந்தக்குமாருக்கும் எந்த முன்விரோதம் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எம்.பி. திருமண மண்டபத்தில் எப்போதும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் எம்.பி. திருமண மண்டபத்தில் உள்ள ஆட்களை தவிர வேறு யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் அ.சா.2 அஜய்யை எதிரி கத்தியால் குத்தியது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஏதோ பிரச்சினை என்று கேள்விப்பட்டு வேகமாக இருசக்கரவாகனத்தில் வரும் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

2. ஏற்கனவே அந்த காயங்களை தான் நான் நீதிமன்றத்தில் காட்டி சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த காயங்களுக்கு தான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் தற்போது நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை தான் தெரிவித்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் போலிசார் எழுதாத வெள்ளை தாளில் என்னிடம் கையொப்பம் மட்டும் கேட்டார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே முதல்

விசாரணையில் போலிசார் கேட்டுக்கொண்டபடி நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

1. இந்த வழக்கு சம்மந்தமாக இந்த நீதிமன்றத்தில் கடந்த 06.11.2025 ம் தேதி நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் எனக்கும் அ.சா.2 அஜய்க்கும் எதிரியால் ஏற்பட்ட காயங்கள் குறித்து நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சாட்சியம் யாரும் என்னை கட்டாயப்படுத்தாமல் நான் உண்மையாக அளித்த சாட்சியம் என்றால் சரிதான். குறுக்கு விசாரணையில் கூறியது போல் போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்று எனது முதல் விசாரணையிலோ போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யும்போது நான் கூறவில்லை என்றால் சரிதான்.

2. முதல் விசாரணையில் போலிசார் என்னை கட்டாயப்படுத்தி சாட்சியம் அளிக்கசொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கட்டாயப்படுத்திய போலிசார் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் கட்டாயப்படுத்தியதாக சாட்சியம் அளித்தது குறித்து நான் இந்த நீதிமன்றத்திலோ காவல்கண்காணிப்பாளரிடமோ வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய சாட்சியம்

உண்மையான சாட்சியம் என்றால் சரிதான். தற்போது வழக்கிற்காக நான் குறுக்கு விசாரணையில் சொல்லி கொடுத்தார் போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் மறு குறுக்கு விசாரணை:**

மானாமதுரை காவல்நிலையத்தில் பணிபுரியும் காவலர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை கட்டாயப்படுத்தவில்லை என்றாலும் அவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் அவ்வாறு சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.19 10:36:58 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை..**